## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
### வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
### (20.08.2022 முதல் 24.08.2022 )

**அறிக்கை எண் 066/2022** **தேதி.19.082022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (16.08.2022 முதல் 18.08.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 24.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16/08 | 17/08 | 18/08 | தேதி | நாள்-1 20/08 | நாள்-2 21/08 | நாள்-3 22/08 | நாள்-4 23/08 | நாள்-5 24/08 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 10 | 6 | 4 | 4 | 18 |
| 33 | 35 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 34 | 34 | 34 | 32 |
| 23 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 23 | 22 |
| 5 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 4 | 4 | 4 | 7 |
| 81 | 84 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 75 | 75 |
| 51 | 66 | 67 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 65 | 55 | 55 | 55 | 65 |
| 13 | 16 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 16 | 16 | 16 | 16 | 16 |
| 200 | 200 | 200 | காற்றுவீசும் திசை | 270 | 270 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (20.082022 முதல் 24.08.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 20-08-2022 | 115 | 85 | 100 | 91 | 98 | 94 | 66 | 114 | 111 | 120 | 98 | 112 | 64 |
| 21-08-2022 | 82 | 59 | 64 | 61 | 66 | 62 | 46 | 80 | 79 | 89 | 63 | 81 | 41 |
| 22-08-2022 | 63 | 45 | 47 | 48 | 51 | 46 | 36 | 61 | 61 | 69 | 46 | 63 | 32 |
| 23-08-2022 | 85 | 65 | 74 | 65 | 72 | 72 | 51 | 85 | 83 | 90 | 74 | 82 | 45 |
| 24-08-2022 | 116 | 83 | 98 | 87 | 96 | 92 | 63 | 115 | 112 | 122 | 97 | 112 | 58 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு லேசான மழையுடன் காற்றின் வேகம் **16** கி.மீ வரை எதிர் பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் மேற்கொள்ள வேண்டும். உயரமான பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும். |
| சோளம் | விதைப்பு | பெறக்கூடிய மழையைப் பயன் படுத்தி மானாவாரியில் தீ வனச்சோளம் விதைப்பு மேற்கொள்ளலாம். |
| தட்டைப்பயிர் | விதைப்பு | பெறக்கூடிய மழையைப் பயன் படுத்தி மானாவாரியில் தட்டப்பயிர் விதைப்பு மேற்கொள்ளலாம். |
| கரும்பு | வளர்பருவம் | வரும் ஐந்து நாட்களில் தூறல் மழை எதிர்பார்க்கப்படுவதால் பின்பட்ட கரும்பிற்கு இரண்டாவது தவணையாக ஒரு ஏக்கருக்கு **85**கிலோ யூரியா மற்றும் **25**கிலோ பொட்டாஷ் உரம் இட்டு மண் அணைக்க வேண்டும். |
| தக்காளி | நடவு | மழை எதிர்பார்க்கப்படுவதால் பார் மற்றும் சாலில் தக்காளி நாற்றுகளை நடவு செய்யவதன் மூலம் தண்ணீர் தேக்கத்தை தடுத்து தக்காளி பயிர் அழுகலை குறைக்கலாம். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு **16** கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் **5** மாதத்திற்கு மேல் வயதுடைய வாழை மற்றும் கரும்புக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கால்நடைகள் | | தற்போதைய வானிலை கறவை மாடுகளில் நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவ வேண்டும்.<br>மாடுகளை குளக்கரைகளிர் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம். |

**குறுஞ்செய்தி**

- பெறக்கூடிய மழையைப் பயன் படுத்தி மானாவாரியில் தட்டப்பயிர் விதைப்பு மேற்கொள்ளலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**